**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>**

**முன்னிலை: திரு. இரா. இராஜசேகரன், எல்.எல்.எம்,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், குன்னம்.

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 03 ஆம் நாள் புதன்கிழமை

**<u>குற்ற எண்.199/2026 இல்</u>**

**<u>குற்றப்பல்வகை மனு எண்.226/2026</u>**

தமிழரசன் 66/2026
த/பெ.ராஜு
2/71 மெயின்ரோடு
கீழமாத்தூர் போஸ்ட்
அழகிரிபாளையம்
ஆலத்தூர் வட்டம்
பெரம்பலூர் மாவட்டம் ... மனுதாரர்/வாகன உரிமையாளர்

/எதிர்/

தமிழக அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
குன்னம் காவல் நிலையம்,
குற்ற எண்.199/2026
வழக்குச் சொத்து எண்.50/2026 ... எதிர் மனுதாரர்/குற்ற முறையீட்டாளர்

இம்மனு 03.06.2026 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.E.சத்தியமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் காவல் துறையினரால் உரிய பதில் தரப்பட்டும், இருதரப்பு வாதம் கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

**<u>உத்தரவு</u>**

1. இம்மனுவானது மனுதாரரால் 497, 503 BNSS-ன் கீழ், குன்னம் காவல் துறையினரால் குன்னம் காவல் நிலைய குற்ற எண்.199/2026 பிரிவு 303(2) BNS r/w 21(1) M&M (D&R) Act-ன் கீழ் கைப்பற்றப்பட்ட TN 46 V 1063 என்ற பதிவெண் கொண்ட JCB அதன் Engine No.H00144866, Chassis No.HAR3DXSSH02530497 வாகனத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும் பின்னிட்டு வழக்குச் சொத்தை இடைக்காலமாக மனுதாரரிடம் ஒப்படைக்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர் தரப்பில் மேற்கண்ட குற்ற எண்ணில் காவல் துறையினரால் கைப்பற்றப்பட்ட TN 46 V 1063 என்ற பதிவெண் கொண்ட JCB அதன் Engine No.H00144866, Chassis No.HAR3DXSSH02530497 வாகனத்தை வைத்துத் தான்

சம்பாதித்து தினமும் தான் பிழைப்பு நடத்தி வந்ததாகவும், கடந்த 23.05.2026 ஆம் தேதி இரவு சுமார் 11.30 மணிக்கு வாடகைக்கு எடுத்துச் சென்ற நபர் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறி குன்னம் காவல் நிலையத்தில் பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கில் மேற்படி வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், தற்போது வரை குன்னம் காவல் நிலைய பொறுப்பிலிருந்து வருவதாகவும், மேற்படி வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்காவிடில் மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத, நஷ்டமும், கஷ்டமும் ஏற்படும் என்றும், மேற்படி JCB வாகனம், காவல் நிலையத்தில் மழை, வெயில் போன்ற இயற்கை காரணங்களால் பாதிக்கப்பட்டு பழுதாகி வாகனத்தை இயக்க முடியாமல் போய்விடும் என்றும், நீதிமன்றம் மேற்கண்ட JCB வாகனத்தை கோரும் பட்சத்தில் நீதிமன்றத்தில் ஒப்படைப்பதாகவும், எனவே, மேற்படி வாகனத்தை எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க உத்தரவிட்டும் பின்னிட்டு அதனை இந்த மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைப்பு செய்ய உத்தரவிடவேண்டியது அவசியம் எனவும் வாதிடப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரரான காவல் துறையினர் தரப்பில் வாதியிடம் வழக்குச் சொத்தை ஒப்படைத்தால் வாதி வழக்குச் சொத்தை விற்கவோ, தடயங்களை கலைக்கவோ அல்லது உருமாற்றம் செய்யவோ கூடும் என்பதாலும், மேலும் இதே போல் மீண்டும் மேற்படி வழக்குச் சொத்தைப் பயன்படுத்தி குற்ற செயலில் ஈடுபடக் கூடும் என்றும், எனவே, வழக்குச் சொத்தை வாதியிடம் ஒப்படைக்க கடுமையாக ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதங்களும் கவனமாக கேட்கப்பட்டு வழக்காவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் குன்னம் காவல் நிலைய குற்ற எண்.199/2026, 303(2) BNS r/w 21(1) M&M(D&R) Act பிரிவில் உள்ள வழக்கில் குன்னம் காவல் உதவி ஆய்வாளர் மனுதாரருக்கு சொந்தமான TN 46 V 1063 என்ற பதிவெண் கொண்ட JCB அதன் Engine No.H00144866, Chassis No.HAR3DXSSH02530497 வாகனத்தை வழக்குச் சொத்தாக கைப்பற்றப்பட்டுள்ளது வழக்கு கோப்பினை பரிசீலித்ததில் தெரியவருகிறது. மேலும் இவ்வழக்குச் சொத்தானது மனுதாரருக்கு உரிமைப்பட்டது அல்ல என்று எந்த ஒரு ஆட்சேபணையும் அரசுத் தரப்பில் இருந்து முன் வைக்கவில்லை. மேலும் சுந்தர்பாய் அம்பாள் எதிர் குஜராத் மாநிலம் வழக்கின் *[ 2003 SCC(Crl)1440 ]* உச்ச நீதிமன்ற தீர்ப்புரையின்படி மனுதாரருக்கு சொந்தமான TN 46 V 1063 என்ற பதிவெண் கொண்ட JCB அதன் Engine No.H00144866,

Chassis No.HAR3DXSSH02530497 வாகனத்தை மனுதாரரிடம் ஒப்படைப்பதால் வழக்கின் விசாரணைக்கு எவ்விதத்திலும் குந்தகம் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மனுதாரர் கீழ்க்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றும் பட்சத்தில் வழக்கு சொத்தை மனுதாரரிடம் இடைக்காலமாக அளிக்க உத்தரவிடப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. மனுதாரரை காவல் துறையினர் அடையாளம் காட்ட வேண்டும்.
2. மனுதாரருக்கு சொந்தமான TN 46 V 1063 என்ற பதிவெண் கொண்ட JCB அதன் Engine No.H00144866, Chassis No.HAR3DXSSH02530497 வாகனத்தின் மதிப்பிற்கேற்ப மனுதாரர் மற்றும் இரு நபர்கள் தலா ரூபாய்.5,00,000/−க்கு பிணையப்பத்திரங்களை இந்நீதிமன்றம் திருப்தியுறும் வகையில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். மேலும் இவ்வழக்கு முடியும் வரை TN 46 V 1063 என்ற பதிவெண் கொண்ட JCB அதன் Engine No.H00144866, Chassis No.HAR3DXSSH02530497 வாகனத்தின் RC Book அசல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்ற பொறுப்பிலிருக்க ஒப்படைக்க வேண்டும்.
3. மேற்கண்ட TN 46 V 1063 என்ற பதிவெண் கொண்ட JCB அதன் Engine No.H00144866, Chassis No.HAR3DXSSH02530497 வாகனத்தின் நான்கு கோணங்களில் புகைப்படம் எடுத்து அந்த புகைப்படத்துடன் அதற்குண்டான குறுந்தகட்டினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.
4. மேற்படி வழக்குச் சொத்தை விற்கவோ, உருமாற்றம் செய்யவோ கூடாது.
5. நீதிமன்றம் கோரும்போது வழக்குச் சொத்தினை நேரில் ஆஜர்படுத்த வேண்டும்.
6. மனுதாரர் மாதத்தின் முதல் வேலை நாளன்று நீதிமன்றத்தில் தனது வழக்கறிஞர் மூலம் மனு செய்து, வழக்குசொத்தை நேரடியாக ஆஜர்படுத்த வேண்டும்.

6. இறுதியாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 03 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJASEKARAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by RAJASEKARAN
Location: Kunnam
Date: 2026.06.03 11:54:10 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், குன்னம்.